# பரிசுத்த பவுல் தமிழ் திருச்சபை

அஹமதி - குவைத்



செய்தி மலர்

செப்டம்பர் 2025

# உன் நம்பிக்கை வீண்போகாது.

நீதி 23:18

இதழ் : 04 மலர் : 25

# முதன்மை ஊழியரிடமிருந்து...

கர்த்தருக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மட்டும் நம்மையும் நம் குடும்பத்தையும், நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கடந்த மாத ஆராதனைகளை ஜெபக்கூடுகைகளை நடத்த தேவன் பாராட்டின கிருபைகளுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம். **2025-ம் ஆண்டின் 9-வது மாதத்தில்** பிரவேசிக்கச் செய்த தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் யாவும் கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பாரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம். விடுமுறையை முடித்து வரவிருக்கும் சபையின் குடும்பங்கள் யாவரையும் கர்த்தர் சுகபத்திரமாய் காத்து நடத்திவர ஜெபிப்போம். விடுமுறைகளை முடித்து பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கல்வியை தொடரவிருக்கும் நம் சபையின் பிள்ளைகள் சகல ஞானத்திலும் சிறந்து விளங்க கர்த்தர் ஞானத்தை தரும்படி ஜெபிப்போம். கர்த்தரின் காக்கும் கரம் நம் எல்லோருடைய கரங்களையும் பற்றி நடத்துவார்

**"தீர்க்கதரிசியாகிய ஆகாயும் இத்தோவின் குமாரனாகிய சகரியாவும் தீர்க்கதரிசனம் சொல்லிவந்தபடியினால் அவர்களுடைய காரியம் கைகூடிவந்தது" (எஸ்றா 6:14)**

தேவனுக்கு பிரியமானவர்களே! இந்த இரண்டு தீர்க்கதரிசிகளின் காரியங்களும் கைகூடிவருவதற்கு மிகமிக முக்கியமான காரணமாக இருந்த இவர்களுடைய தீர்க்கதரிசனம் என்ன என்று வேதத்தை புரட்டுகின்ற பொழுது வேதம் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிற காரியங்கள் **ஆகாய் 1:13**

சொல்லுகிறது: **"அப்பொழுது கர்த்தருடைய தூதனாகிய ஆகாய், கர்த்தர் தூதனுப்பிய வார்த்தையின்படி ஜனங்களை நோக்கி: நான் உங்களோடே இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான்"** என்றும், சகரியா 4:6 சொல்லுகிறது: **"கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"** என்றும் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள் என்று வேதம் தெளிவுபட விளங்கச் செய்கிறது.

ஆகாயின் தீர்க்கதரிசனம் **"கர்த்தர் நம்மோடு கூட இருக்கிறார்"** என்றும், சகரியாவின் தீர்க்கதரிசனம் **"தேவனுடைய ஆவியினாலே எல்லாம் ஆகும்"** என்றும் நமக்கு கோடிட்டு விளக்குகிறது. இந்த இரண்டு தீர்க்கதரிசிகளுடைய தீர்க்கதரிசனங்களை நாம் அஸ்திபாரமாகக் கொண்டு நம்முடைய வாழ்க்கையிலும் தேவையறிந்து அப்பியாசப்படுத்த வேண்டும்.

வாழ்க்கையில் சோர்வுகள், பெலவீனங்கள், கலக்கங்கள், சஞ்சலங்கள்... ஏற்படுகிற நேரங்களில் ஆகாய் தீர்க்கதரிசி சொன்னது போல **"தேவன் நம்மோடு கூட இருக்கிறார்"** என்பதை மறக்காமல் மனதில் உறுதியாய் நினைவில் கொள்ளவேண்டும். இத்தோடு சகரியா தீர்க்கதரிசி சொன்னது போல நம் **"தேவனுடைய ஆவியின் பெலத்தால்"** எனக்கு எல்லாம் ஜெயமாக மாறும் என்று விசுவாச அறிக்கை செய்கின்ற போதும் கர்த்தர் நம் சகல காரியங்களையும் நமக்கு சாதகமாக கைகூடி வரச்செய்வார் என்கின்ற மனநிறைவோடு நாம் நம் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்வோம்: ஜெயம் பெறுவோம். தேவன் தாமே எல்லோருக்கும் உன்னத பெலத்தையும், ஆசீரையும் அளவில்லாமல் தந்தருள்வாராக. தேவன் விட்டுச் சென்ற சமாதானம் நம் குடும்பங்களில் சதாகாலங்களும் நிலைத்திருப்பதாக. நம்மோடு கூட இருக்கும் தேவனுக்கே மகிமை உண்டாவதாக. ஆமென்.

**கர்த்தர் கிருபையில்**

**சகோ. ஆரோக்கியதாஸ். P**

**கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதர சகோதரிகளுக்கு !**

**தாங்கள் இந்திய தேச மிஷனரிகளை தாங்கும் ஊழியத்திற்கு பொருத்தனை செய்திருந்தால், தங்களது காணிக்கைகளை சகோ. தாஸ்கருணா அவர்களிடத்திலும்,**

**திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று பொருத்தனை செய்திருந்தால் தங்களது காணிக்கைகளை சகோ. ஜெய் சாம் டேனியல் அவர்களிடத்திலும்,**

**போக்குவரத்து ஊழியத்துக்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. கிரன் அவர்களிடத்திலும்,**

**ஆலயம் கட்டுமான ஊழியத்திற்கென்று கொடுக்கிறவர்கள் தங்கள் காணிக்கைகளை சகோ. சாம் ஆனந்த் அவர்களிடத்திலும் கொடுத்து, ஊழியத்தை தாங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறோம்.**

**தேவச் செய்தி**



## பிரயாசப்படுகிறேன்

கர்த்தருக்குள் பிரியானமானவர்களே! **லூக்கா 5:5-ல்**

**"அதற்கு சீமோன் ஐயரே இரா முழுவதும் நாங்கள் பிரயாசப் பட்டும் ஒன்றும்அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையை போடுகிறேன் என்றார்."**

இந்த வசனத்தில் குறிப்பிடுகிறது போல நாமும் நிறைய காரியங்களை குறித்து பிரயாசப்படுகிறோம். இங்கே சீமோன் பேதுரு இரவு முழுவதும் மீனைப் பிடிக்கவேண்டுமென்று பிரயாசப்படுகிறார். அங்கே மீன் இல்லாமல் இல்லை அவருடைய வலையிலே ஒன்றும் அகப்படவில்லை. எவ்வளவு தூரமாக சென்றாலும் அவருடைய வலையிலே ஒன்றும் அகப்படவில்லை. அவருடைய தொழில் மீன் பிடிப்பதாக இருந்தாலும் எங்கே மீன் இருக்கிறது என்றும்;அதை எப்படி பிடிப்பது என்றும் அவருக்கு தெரியவில்லை.

**லூக்கா 5:3-ல் அப்பொழுது அந்த படவுகளில் ஒன்றில் ஏறினார் அது சீமோனுடையதாய் இருந்தது அதை கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக்கேட்டுகொண்டு; அந்த படவில் உட்கார்ந்து ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார்** என்று வாசிக்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து படவில் ஏறின உடனே வலையை போடச்சொல்லி அற்புதங்களை செய்யவில்லை, முதலில் போதகம் செய்கிறார். நான் விசுவாசிக்கிறேன் நிச்சயமாக அவர் விசுவாசத்தைக் குறித்துதான் போதித்திருக்க வேண்டும்;எனவே தான் இயேசு பேதுருவிடத்தில் ஆழத்திலே வலையை போடு என்று சொல்லும் போது அவர் அதைக் குறித்து அவரிடத்தில் எந்த கேள்வியும் கேட்காமல் அவருடைய வார்த்தையின்படி வலையை வீசுகிறான்;வலை கிழியத்தக்கதாக மீன்களை பிடிக்கிறான்.

நாமும் நம்முடைய வாழ்க்கையில் எத்தனை போராட்டங்கள் வந்தாலும் விசுவாசத்தோடு இயேசுவின் நாமத்தில் கேட்கும் பொழுது திரளான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்கிறோம் நம்முடைய பிரயாசமும் வீணாய் போவதில்லை. மீன்களை பிடித்துக் கொண்டிருந்த ஒருவரை மனுஷரைப் பிடிக்கிறவராக மாற்றினார். காலம் காலமாக ஊழியக்காரராய் இருந்தாலும் வேதத்தில் தேறினவர்களாய் இருந்தாலும் ஆத்துமாக்களை எப்படி தேவனுக்கென்று ஆதாயப்படுத்துவது என்று அறிந்திருக்கவில்லை என்றால் என்னதான் ஆத்துமாக்கள் வேண்டும் என்று இரா முழுவதும் பிரயாசப் பட்டாலும் ஒன்றும் அகப்படாது. தேவனுடைய வார்த்தையின்படியும்; உண்மையின்படியும் விசுவாசத்தோடு நாம் ஜெபிக்கும் போது ஆத்துமாக்களை கூட்டிச் சேர்க்க தேவன் வல்லமையுள்ளவராய் இருக்கிறார்.

தேவனுடைய பிரயாசமும் இப்படியாயிருக்கிறது **சங்கீதம் 14:2 ல்** வாசிக்கிறோம் **"தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க கர்த்தர் பரலோகத்திலிருந்து மனுபுத்திரனை கண்ணோக்கினார்"** என்று வாசிக்கிறோம்.

நாம் அவரை தேடுகிறதை விட அதிகமாய் அவர் நம்மைத் தேடுகிறார். அனுதினமும் நம் வாழ்வில் நன்மையும்;கிருபையும் தருகிற தேவனை நாம் இன்னும் அதிகமதிகமாய் ஒவ்வொரு நாளும் தேட வேண்டும்.

1கொரி 2:5 **என் பேச்சும்; என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல் ஆவியினாலும்; பெலத்தினாலும் உறுதிப்படுத்தப் பட்டதாயிருந்தது**. நாம் பிரசங்கிக்கும் போது சுய பலத்தையோ; சுய ஞானத்தைப் பற்றியோ பெருமை பாராட்டாமலும்; பிறரை பற்றி குறை கூறாமலும் 1கொரி 2:7ல் வாசிக்கிறது போல **உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும்; மறைக்கப் பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம்.**

1கொரி 3:7 **அப்படியிருக்க நடுகிறவனாலும் ஒன்றுமில்லை; நீர்ப்பாய்ச்சு கிறவனாலும் ஒன்றுமில்லை;விளையச் செய்கிற தேவனாலே எல்லாமாகும்.**

தேவனுடைய வார்தையை ஒருவனுக்கு பிரசங்கித்து அவருடைய அற்புதங்களை விவரித்து சொன்னாலும் அவனை இரட்சிப்புக்குள் நடத்த தேவன் ஒருவராலே கூடும். தேவனுடைய வார்த்தையாகிய விதையை விதைக்க வேண்டியது ஊழியக்காரரின் கடமை. அந்த விதையை விளையச் செய்ய தேவனாலே கூடும்.

1.கொரி 3:8 **மேலும் நடுகிறவனும் நீர்ப் பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக் கிறார்கள். அவனவன் தன் தன் வேலைக்குத் தக்கதாய் கூலியை பெறுவான்**. உலக காரியங்களுக்காக இல்லாமல் தேவனுக்கென்று ஆத்தமாக்களை கூட்டிச் சேர்க்கிற காரியத்தில் சோர்ந்து போகாமல் நாம் பிரயாசப்படும் பொழுது அதற்கான கூலியை நாம் நிச்சயமாக தேவனிடத்தில் பெற்றுக்கொள்வோம்.

**பலத்தினாலும் அல்ல;பராக்கிரமத்தினாலும் அல்ல;என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**

ஆம் மனுஷனுடைய சுய பலத்தினாலோ; அல்லது சுய ஞானத்தினாலோ எல்லாவற்றையும் செய்ய இயலாது. சத்துருவானவன் பூமிக்குரிய காரியங்களில் நம்முடைய கவனத்தை இழுத்து; தேவனுக்கு விருப்பம் இல்லாத காரியங்களை நாம் செய்யும்படி நம்முடைய ஆத்துமாவை பாதாளத்தில் விழும்படி செய்து விடுவான், ஆவியானவருடைய வழி நடத்துதல் இல்லாமல் இந்த வாழ்வை நம்மால் வாழ முடியாது. பிரசங்கி 2:19 **அவன் புத்திமானாயிருப்பானோ; மூடனாயிருப்பானோ; அதை யார்அறிவார்? ஆகிலும் சூரியனுக்கு கீழே நாம் பிரயாசப்படுகிற எல்லா காரியங்களும் மாயையே** என்று பிரசங்கி சொல்லுகிறார். நாம் இந்த பூமியில் வாழும் போது எவ்வளவு பெரிய உயர்ந்த இடத்தில் இருந்தாலும்; பேரோடும் பெருமையோடும் சகல செல்வாக்குகளோடு வாழ்ந்தாலும் இவை ஒன்றும் நம்மை பரலோகத்திற்கு கொண்டு செல்லாது தேவன் நமக்கென்று கொடுத்த இந்த வாழ்க்கையை தேவனுடைய நாமத்தை உயர்த்தத்தக்கதாக; சாட்சியுள்ள வாழ்க்கையை வாழும் போது பரலோகம் நமக்கு திறந்த வாசலை வைத்திருக்கும். மேலான காரியங்களுக்காக நாம் பிரயாசப்படும் பொழுது;இந்த பூமியில் நாம் வாழ்கின்ற வாழ்க்கையை தேவன் ஆசிர்வதித்து கொடுப்பார்.

வெளி 2:3 **நீ சகித்துக் கொண்டிருக்கிறதையும் பொறுமையாயிருக் கிறதையும்; என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்பட்டதை அறிந்திருக்கிறேன்** என்று கூறுகிறார். நாம் தேவனுடைய காரியங்களுக்காக எவைகளை யெல்லாம் சகித்துக் கொள்ளுகிறோம்; எவ்வளவு பொறுமையாக இருக்கிறோம் என்பதையெல்லாம் அவர் அறிந்திருக்கிறார்; தவறாமல் சபைக்கு செல்வதோ; தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பது மட்டுமல்ல ஒருவர் மீது ஒருவர் அன்பு செலுத்தும்போது அங்கே கிறிஸ்துவின் அன்பு வெளிப்பட வேண்டும்.

அன்பு சகலத்தையும் சகிக்கும் என்று பிரசங்கித்து விட்டு பிறர் செய்யும் சிறு தவறுகளை கூட மன்னிக்க மனதில்லாமல் ஒருவரை பற்றி ஒருவர் குறை கூறும் போது அங்கே கிறிஸ்துவின் அன்பு வெளிப்படவில்லை.

1கொரி 13:13 **இப்பொழுது விசுவாசம்;நம்பிக்கை; அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது** என்று வாசிக்கிறோம் ஒருவருக்கொருவர் அன்போடும்; சகோதர சிநேகத்தோடும் தேவனுடைய நாமத்தை உயர்த்தும்படிக்கு இளைப்படையாமல் பிரயாசப்படுவோம் . ஆமென்...

**கர்த்தரின் கிருபையில்**

**சகோ. AK ஆரோக்கியராஜ்**

## சிநேகத்தோடு

உம்மை மறந்ததனால் என் வாழ்வில்
தீமை நிறைந்ததையா
இரவும் பகலும் எந்தன் கண்ணில்
கண்ணீர் பெருகுதையா
பாரம் நிறைந்த என் இதயம்
உம்மைப் போற்றி பாடுதையா – உம்
பிள்ளை என்னை நீரும் கொஞ்சம் பாரும்
பட்ட பாடுனக்கு போதும் என்று கூறும்
நீர் என்னை நினைத்ததனால் என் வாழ்வில்
கிருபை கிடைத்ததையா
இரவும் என்னைச் சுற்றிப் பகலாய்
வெளிச்சம் தந்ததையா
தேவை நான் என்று நீர் தேடி வந்ததனால்
தீமை என்னை அணுகவில்லை – தினம்
உந்தன் காவலோடு நடக்கின்றேன்
அநாதி சிநேகத்தால் அழைத்தீரே என் தேவா
நானும் உம்மைத் தேடுகிறேன்
அளவில்லா சிநேகத்தோடு .. .. .. ..**Amen**

**சகோதரி K.வனிதா**

# தேவனுக்கே மகிமை

நமது ஆண்டவரும் அருமை இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிதான நாமத்திற்கு துதியும் கனமும் மகிமையும் உண்டாவதாக.

கர்த்தராகிய ஆண்டவர் வார்த்தையால் படைத்த இந்த உலகத்திலே மனிதர்களாகிய நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்குள் வரும் போது நமக்குள் ஏற்படக்கூடிய மாற்றங்களை வேதாகமத்தின் அடிப்படையில் தியானிக்க கர்த்தர் கிருபை தருவராக.

**1. புதுசிருஷ்டி**:வானத்தையும் அதிலுள்ளவைகளையும்,பூமியையும் அதிலுள்ள வைகளையும், சமுத்திரத்தையும் அதிலுள்ளவைகளையும் சிருஷ்டித்தவரும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவருமான கர்த்தராகிய தேவன் அவருடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். இப்படி சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனாகிய நமக்குள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது (**கொலோசெயர் 3:5-9**) வரையுள்ள வசனத்தின்படி நமக்குள் இருக்கும்.

1. விபசாரம்; அசுத்தம்; மோகம்; துர்இச்சை; பொருளாசை ஆகிய இவைகள் நம்மை விட்டொழியும்.
2. கோபம்; மூர்க்கம்; பொறாமை; வாயில் பிறக்கலாகாத தூஷணம்; வம்பு வார்த்தைகள் நம்மை விட்டகலும்.
3. ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமல் பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் நாம் களைந்து போட முடியும்.

**கொலோசெயர் 3:10**-ன்படி நம்மை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ள முடியும். மேலும் **எபேசியர் 4:24**-ல் சொல்லுகிறபடி மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ள முடியும்.

**2. பழையவைகள் ஒழியும் எல்லாம் புதிதாகும்** : **2.கொரிந்தியர் 5:17**-ல் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்று வாசிக்கிறோம்.கர்த்தராகிய ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் நேசிக்கிறவராய் இருக்கிறார். நம்முடைய பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி கிறிஸ்துவுக்குள் வரும்போது அவர் சகலத்தையும் புதிதாக்குகிறவராய் காணப்படுகிறார். அவர் சகலத்தையும் புதிதாக்குகிறவராய் காணப்படுகிறார். அவர் நம்முடைய உள்ளங்களில் புதிதான ஆவியைக் கட்டளையிடுகிறார். **2.கொரிந்தியர் 4:16**-ல் எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும் உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது என்று வாசிக்கிறோம்.

**லூக்கா 15 ஆம் அதிகாரம் 11 முதல் 24** வரையுள்ள வசனங்களை வாசிக்கும் போது - துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்ட

இளைய குமாரன் எல்லாவற்றையும் இழந்து, தன் தகப்பனை நோக்கி ஓடி வந்து "தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவம் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல" என்று சொல்கிறான். ஆனால் தகப்பனோ, அவனைக் கண்டு மனதுருகி அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு, அவனை முத்தஞ்செய்து, அவனுக்கு பழைய வஸ்திரங்களை களைந்து போட்டு, புதிய உயர்ந்த வஸ்திரத்தையும், கைக்கு மோதிரத்தையும், காலுக்கு பாதரட்சைகளையும் போட்டு கொழுத்த கன்றை அடித்து என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான் காணாமற் போனான் திரும்பவும் காணப்பட்டான் என்று சந்தோஷமடைவதை பார்க்கிறோம். இதைத்தான் **லூக்கா 15:7**-ல் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று வாசிக்கிறோம். இவ்வாறாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்குள் வரும்போது பழையவைகள் ஒழிந்துபோய் எல்லாம் புதிதாக மாறுவதை நம்மால் உணர முடியும்

**3.இரட்சிப்பு வரும்:_சங்கீதம் 85:9-ல் "அவருடைய இரட்சிப்பு அவருக்கு பயந்தவர்களுக்கு சமீபமாயிருக்கிறது. கர்த்தருடைய இரட்சிப்பானது தலை முறை தலைமுறைதோறும் இருக்கும்"** என்று வாசிக்கிறோம். இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்ப்பதற்காக காட்டத்தி மரத்தில் ஏறி இருந்த சகேயு வை இயேசு அண்ணாந்து பார்த்து **"சகேயுவே நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு உன் வீட்டில் தங்க வேண்டும்"**என்று சொன்னதும் சந்தோஷமாய், இயேசுவை தனது வீட்டிற்கு அழைத்து செல்கிறான். சகேயு இயேசுவைப் பார்த்து **"ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்கு கொடுத்துவிடுகிறேன். ஒருவனிடத்தில் அநியாயமாய் வாங்கினதுண்டானால் நாலத்தனையாய் திருப்பி கொடுக்கிறேன்"** என்று சொல்கிறான். இயேசு அவனை நோக்கி **"இன்றைக்கு இந்த வீட்டிற்கு இரட்சிப்பு வந்தது"** என்றார். பிரியமானவர்களே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சகேயுவின் உள்ளத்தில் வந்தவுடன், அவன் பாவ வாழ்க்கை அவனை விட்டு மாறிவிடுகிறதை பார்க்க முடிகிறது. இயேசு கிறிஸ்துவை உண்மையாய் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும் போது இரட்சிப்பை பெற்றுக் கொள்ள முடிகிறது. **சங்கீதம் 4:12 வாசிக்கிறோம் அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷருக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. சங்கீதம் 62:6-ன்படி அவரே நமக்கு கன்மலையும் நம் இரட்சிப்பும் நம் உயர்ந்த அடைக்கலமுமாய் இருக்கிறார்.**

**4.பரதீசு கிடைக்கும் : லூக்கா 23:39 - 43** வரையுள்ள வசனங்களை வாசிக்கும் போது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட போது இரண்டு பக்கத்திலும் நின்ற குற்றவாளிகளில் ஒருவன் இயேசுவை இகழ்கிறான். ஆனால்

மற்றவனோ நாம் நடப்பித்தவைகளுக்கு தண்டிக்கப்படுகிறோம். ஆனால் இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று இயேசுவை இகழ்ந்தவனை கடிந்து கொண்டு இயேசுவிடம், "ஆண்டவரே உம்முடைய இராஜ்ஜியத்தில் வரும்போது அடியேனை நினைத் தருளும்" என்று சொல்லுகிறான். இயேசு அவ- னிடம் இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் என்றார். ஆம்; பிரியமானவர்களே கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு அவருக்குள் வரும்போது பழைய வாழ்க்கை மாறி புதிய சிருஷ்டியாகி, இரட்சிப்பு கிடைக்கப் பெற்று பரதீசின் வாழ்வை அடையவும் அதை அனுபவிக்கவும் முடியும். **வெளிப்படுத்தல் 2:7**-ல் "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார். நாம் ஒவ்வொருவரும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக மாறுவதற்கு கர்த்தர் தாமே நமக்கு உதவி புரிவாராக. கர்த்தர் நம் ஒவ்வொருவரையும் ஆசிர்வதிப்பாராக.

**ஆமென்**

**சகோதரி . ஜீனா சதீஷ்குமார்**

---

## சிறகுகளின் நிழல்

நம் வாழ்க்கைப் பயணத்தில் சோர்வுற்ற நேரத்திலும்;
எதிரிகளின் சூழ்ச்சிகளினால் - நாம்
திகைத்துப்போன காலத்திலும்;
நோயுற்ற வேளையிலும், தள்ளப்பட்ட நிலையிலும்;
பாதுகாப்பற்ற இவ்வுலகினில் - நமக்கு
அடைக்கலமாக, பெலனாக, நம்பிக்கையுமாகயிருந்து
நம்மை உன்னதமானவராகத் தம்
சிறகுகளின் நிழலில் மறைத்து காப்பவர்
இயேசு ஒருவர் மட்டுமெ;
சாத்தானின் பிடியிலிருந்து நம்மை மீட்பவரும் அவரே
நெருக்கத்தின் சூழ்நிலைகளை மாற்றி அமைப்பவரே
இரட்டிப்பான நன்மைகளைப் பெற உம் அன்பின் நிழலை
நாங்கள் என்றும் வாஞ்சிக்கின்றோம்;
உம் செட்டைகளின் கீழ் ஆரோக்கியமே!
உம் பாதம் ஒன்றே போதும்! உம் நிழலில்
எமக்கு அருள்புரிந்து; அனுதினமும் உம்மையே
நாங்கள் சார்ந்து வாழ, நீர் ஒருவர் மட்டும் போதும்;
எம் வாழ்வினை சிறப்பிக்க; தீங்கு ஒன்றும்
அணுகாமல், வாதைகளும் நெருக்காமல், உம்
கரங்களின் நிழலால் எம்மை மறைத்து அருள்புரிய வாஞ்சிக்கின்றோம்.

**Sis. A.பியூலா மெர்சிபால்**

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

**" உன் பேரை பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்**
**( ஆதி–12:2 ) "**

செல்வன். கிதியோன் செங்குட்டுவன்
செல்வி . மோனிகா ஷெர்லின் பால்ராஜ்
செல்வி . விடியா ஆரோக்கிய தாஸ்
செல்வன் . ஆல்வின்ராஜ் எஸ்தர்ராஜ்
சகோதரி . ஜரின் நிஷா கிரன் குமார்
செல்வன் . அமீஷ் டேவீட் ஜெயகுமார்
சகோதரி . ஷர்மிளா சீனிவாசன்
சகோ . சேர்மன் ராஜ்
சகோ . ஜாண் போஸ்கோ
சகோ . ஜெகநாதன்
செல்வி . டெலிஷா காட்லின் ஸ்டீபன்
சகோதரி . செலின் சோபினா மேரி டேவீட்
சகோதரி . ஷீலா இன்ப ராணி பக்தராஜ்
செல்வன் . மிருதுன்ராஜ் சதீஷ்குமார்
செல்வன் . சந்தோஷ் ஜெயகுமார் ரவி ஜாண்
சகோதரி . சுபா ஸ்டீபன்
சகோதரி . பெர்டினா சுனில்
சகோ . மணிராஜ்

சகோதரி . எவாஞ்சிலின் ராஜ கிறிஸ்டி சகயா
செல்வன் . பிரையன் சதீஷ் குமார்
செல்வி . தீபா ராஜன்
செல்வன் . டோவின் ஜோசப் திவியராஜ்
செல்வன் . விக்டர் செங்குட்டுவன்
சகோதரி . தெபோரா ஆனி மேரி சைமன்
செல்வி . லாவண்யா சாந்தி கண்ணன்
சகோதரி . பெர்னெத் அல்ஜியா மேரி தாமஸ்
சகோதரி . ரீனா வேளாங்கண்ணி
சகோதரி . பிரதீபா ஷெரினா வினோத்
செல்வன் . ஆரோன் டேனியல் மணிராஜ்
சகோ . தினேஷ் குமார்
செல்வி . ஜாரெல் ஜெனிகா ஜெய் ஷோம்
செல்வி . பிளெஸி பியூலா வில்சன்
செல்வன் . கெவின் ஆஷ்ரே ஆரோக்கியராஜ்
செல்வி . ரின்ஷி வேளாங்கண்ணி




## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்




திரு / திருமதி – ஞான விஜயன் & ஏமி ஜாய் சுகின்
திரு / திருமதி – வில்சன் செல்லையா & குமுதினி
திரு / திருமதி – பிராங்கிளின் கலைசெல்வன் & அருள் நான்சி
திரு / திருமதி – ரவி ஜாண் பீட்டர் & பாக்யா
திரு / திருமதி – மார்க் ஆண்டனி & டெய்சி நீனா




**'ஆகையால் நீங்கள் புசித்தாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக் கென்று செய்யுங்கள் ' – 1.கொரிந்தியர் 10 – 31**

**பிறந்த நாள் மற்றும் திருமண நாளை கொண்டாடுகிற அனைவருக்கும் சபையின் செயற்குழு சார்பாக இனிய பிறந்த நாள் மற்றும் திருமண நாள் வாழ்த்துக்கள்**

# செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/09/2025 | சகோ. வெங்கட் ஜெபராஜ் | சகோ. ஜெகநாதன் |
| 12/09/2025 | சகோ. கிறிஸ்டோபர் | சகோ. ஸ்டாலின் |
| 19/09/2025 | உபவாச திருவிருந்து ஆராதனை (பாஸ்டர். ஜாண் சாமுவேல் - பெங்களூர்) | |
| 26/09/2025 | சகோ. பிராங்ளின் | சகோ. சாம் ஆனந்த் |

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/09/2025 | சகோதரி . ஆஸ்லின் சுபின்சிங் | சகோதரி . மெர்ஷலின் தயா யேசுரெத்தினம் |
| 14/09/2025 | சகோ. தாஸ் கருணா | சகோ. ஆரோக்கிய ராஜ் |
| 21/09/2025 | சகோதரி. ஷீபா பிரசாத் | சகோதரி. நகோமி ஜான்சன் |
| 28/09/2025 | சகோ. ஜாண் போஸ்கோ | சகோ. எபினேசர் |

**11/09/2025 வியாழன் அன்று முழு இரவு ஜெபம்**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம்– இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை
தேவச்செய்தி : பாஸ்டர். ஜாண் சாமுவேல் - பெங்களூர்

**13/09/2025 சனிக்கிழமை – அன்று சகோதரிகள் ஐக்கியக் கூடுகை**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் – மாலை 6:30 – 8:30 வரை
வேத வினா பகுதி – பிலிப்பியர்

**26/09/2025 வெள்ளி அன்று வாலிபர் ஐக்கியக் கூடுகை**
இடம் – பாஹாகீல் ஜெப வீடு – நேரம் – மாலை 6:30 – 8:15 வரை
வேத வினா பகுதி – யாத்திராகமம்

**செவ்வாய் கிழமை**
குடும்ப ஆசீர்வாத ஜெபக்கூடுகை
இடம் – பாஹாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**வியாழக்கிழமை**
பாடல் பயிற்சி
இடம் – பாஹாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

**சனிக்கிழமை**
சிறுவர் வேதாகமப் பள்ளி
இடம் – பாஹாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:00 வரை

**திங்கட்கிழமை**
சகோதரிகள் ஜெபம்
இடம் – பாஹாகில் ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

## ஆவிக்குரிய மாதிரி (Spritual Example)

கிறிஸ்துவுக்குள் பிரியமான சபையின் வாலிப சகோதர சகோதரிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். இன்றைக்கு நாம் இளம் வாலிபர்களாக அல்லது வாலிப வயதிலோ அல்லது வாலிப வயதை கடந்தோ ஓடி கொண்டிருக்கலாம். ஒருகணம் நாம் கடந்து வந்த பாதைகளை திரும்பி பார்ப்போம். வசனம் இப்படியாக சொல்லுகிறது **1தீமோ 4:12 உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டைப்பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும் நடக்கையிலும் அன்பிலும் ஆவியிலும் விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.** இங்கு அப்போ. பவுல் தீமோத்தேயுக்கு எழுதும் போது இந்த வசனத்தில் ஆறு காரியங்களை குறித்து சொல்லுகிறதை பார்க்கிறோம்.

1) **வார்த்தை :** நம்முடைய வாயில் இருந்து புறப்படுகிற வார்த்தைகள் மற்ற சகோதர சகோதரிகளை காயப்படுத்துகிறதாய் காணப்படுகிறதா இல்லை காயம் கட்டுகிறதாய் காணப்படுகிறதா? **எபே 4:29** ல் பார்க்கிறோம் **கெட்ட வார்த்தை ஒன்றும் வாயிலிருந்து புறப்பட வேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை நம் வாயிலிருந்து புறப்படுவதாக** என்று பார்க்கிறோம். **சங் 19:14 நம் வாயின் வார்த்தைகள் கர்த்தருக்கு பிரியமாய் இருப்பதாக** என்று பார்க்கிறோம். **யோபு 23:12** யில் யோபு சொல்கிறார்; **கர்த்தருடைய வார்த்தைகளை அவருக்கு வேண்டிய ஆகாரத்தை பார்க்கிலும் அதிகமாய் காத்து கொண்டேன்** என்பதாக. இப்படியாக மேலே சொல்லப்பட்ட வசனங்கள் மூலம் நம்மை காத்துக்கொள்ளும் போது பரிசுத்தமாய் வாழ முடியும் மாத்திரமல்ல மற்றவர்களுக்கும் நாம் மாதிரியை காண்பிக்க முடியும்.

2) **நடக்கை:** நம்முடைய நடக்கை தேவனுக்கு பிரியமானதாய் காணப்படுகிறதா? இல்லை மற்றவர்கள் மத்தியில் தூசிக்கபடுகிற மாதிரி நடந்து கொள்கிறோமா? **பிரசங்கி 11:9** – ல் வாசிக்கிறோம் **நீங்கள் உங்கள் இஷ்டத்துக்கு நடவுங்கள். ஆனால் நியாயத்தீர்ப்பு நாளில் ஆண்டவர் நியாயந்தீர்ப்பார்** என்று சாலமோன் ஞானி சொல்கிறதை பார்க்கிறோம். **ஆதி 39:7-12** ஆகிய வசனங்களில் பார்க்கிறோம் சந்தர்ப்பங்கள் அமைந்த போதும் யோசேப்பு பாவத்தை உதறி தள்ளிவிட்டு ஓடினார் என்று. **யோபு 31:1** ல் பார்க்கிறோம்; இச்சையை தூண்டுகிற அவயங்களினால் பாவஞ்செய்யாமல் இருக்கும்படி யோபு தேவனோடு உடன்படிக்கை பண்ணினார் என்பதாக. அப்படிப்பட்ட தீர்மானங்களை எடுத்து நாம் நம்மை பரிசுத்த நடக்கை உடையவர்களாய் காத்துக்கொளளுவோம்.

3) **அன்பு : மத்தேயு 24:12** ல் பார்க்கிறோம் **கடைசி நாட்களில் அநேகருடைய அன்பு தணிந்துபோம்** என்பதாக. **ரோமர் 12:9** – ல் பார்க்கிறோம் **நம்முடைய அன்பு மாயமற்றதாயிருப்பதாக** என்று. அப்படியானால் நம்முடைய அன்பு எப்படிப்பட்டதாய் இருக்க வேண்டும் என்று பரிசுத்த வேதம் நமக்கு கற்று தருகிறது

**1 பேதுரு 1:22** சுத்த இருதயத்தோடு அன்பு கூறும் போது மாய்மாலமான வேஷம் அழிந்து நல்ல ஒரு சகோதர சிநேகம் உண்டாகும் என்று பார்க்கிறோம்.

4) ஆவி : **ரோமர் 8:6** ல் வாசிக்கிறோம் **மாம்ச சிந்தை மரணம் ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.** இப்படிப்பட்ட ஆவியின் சிந்தை நமக்கு காணப்பட தேவனிடத்தில் அனுதினமும் மன்றாட வேண்டும். **ரோமர் 8:15**_ல் பார்க்கிறோம் **ஆவியின் படி நடக்கிறவன் ஆவிக்குரியவைகளை சிந்திக்கிறான்** என்று. **நீதி 20:27** _ **மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது** என்று அந்த தீபத்தை அணைத்து போடாதபடி இருளான மாம்ச சிந்தை நம்மை மேற்கொள்ளாதபடி வேண்டிக்கொள்ளுவோம். **சங்கீ 143:10 –** ல் கர்த்தருடைய நல்ல ஆவி நம்மை செவ்வையான வழியில் நடத்துவாராக.

5) விசுவாசம் : தீமோத்தேயுவை குறித்து அப்போ. பவுல் **1 தீமோ 1:2**–ல் இப்படியாக சொல்லுகிறார் விசுவாசத்தில் உத்தம குமாரன் இப்படிபட்ட சாட்சி நம்மை குறித்து காணப்படுகிறதா? **எபி 11:24-26 –** ல் மோசேயை குறித்து பார்க்கும் போது விசுவாசத்தில் அவன் பெரியவனான போது தன்னுடைய பெயர் பிரஸ்தாபத்தை கொண்டு வருகிற எல்லா காரியங்களையும் விட்டு தேவனுடைய ஜனங்களோடு துன்பத்தை அனுபவிப்பதை தெரிந்து கொண்டு இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் என்று பார்க்கிறோம் இப்படிப்பட்ட விசுவாசம் நமக்குள்ளாக பெருக தேவன் கிருபை தருவாராக

6) கற்பு : வேதத்தில் கற்பு என்பது பாலியல் ஒழுக்கத்தையும் பரிசுத்தத்தையும் குறிக்கிறது. இது திருமண பந்தத்தில் மட்டுமின்றி தனிமனித ஒழுக்கத்திலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. பாவத்தை தவிர்த்து பரிசுத்த வாழ்க்கை வாழவும் தேவனுக்கு உகந்தவர்களாக வாழவும் தேவன் கிருபை தருவாராக. **1 கொரி 6:9-10 –**ல் சொல்லப்பட்ட பரிசுத்த்ததை சீர்குலைக்கிற காரியங்களுக்கு விலகி **1 கொரி 6: 11-12 –** ல் அப்போ. பவுல் சொல்லுகிறதைப் போல எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்பட மாட்டேன் என்ற கூற்றின்படி நாம் நம்முடைய கற்புள்ள நடக்கைகளை காத்துக்கொள்ளுவோம்.

மேலே சொல்லப்பட்ட 6 காரியங்களையும் கடைபிடித்து நம்முடைய இளமையை குறித்து ஒருவரும் அசட்டை பண்ணாதபடிக்கு எபேசி 4:22-24 வசனங்களின்படி முந்தின நடக்கைக்குரிய மோசம் போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை களைந்து போட்டு உங்கள் உள்ளத்தில் புதிதான ஆவியுள்ளவர்களாகி தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுங்கள் தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசிர்வதிப்பாராக!...

**– கிறிஸ்துவின் பணியில் ATC Youth Team**

**Be an example : 1 Timothy 4 : 12**

## செப்டம்பர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை சங்கீதப் புத்தகத்திலுள்ள 1 முதல் 50 அதிகாரத்திலுள்ள வசனங்களிலிருந்து , வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்.**

1. கர்த்தருடைய ஆலோசனையும் இருதயத்தின் நினைவுகளும் எப்படி நிற்கும்?
2. கர்த்தர் எப்படிப்பட்ட மனுஷனை அருவருக்கிறார்?
3. கடன் வாங்கினால் செலுத்தாமல் போகிறது யார்?
4. யார் பாவிகளுக்கு வழியை தெரிவிக்கிறார்?
5. தாவீது மகா சபையிலே எதை பிரசங்கித்தான்?
6. யாருக்கு இரட்சிப்பை கட்டளையிட வேண்டும்?
7. கர்த்தருடைய சொற்கள் எப்படிப்பட்டவைகள்?
8. கர்த்தர் யாரை இரட்சிக்கிறார்?
9. எதை சுற்றி உலாவி எதை எண்ண வேண்டும்?
10. யார் நியாயாதிபதி?
11. கர்த்தர் யாருடைய நியாயத்தை விசாரிக்கிறார்?
12. யாருடைய கண்கள் எப்போதும் கர்த்தரை நோக்கிக் கொண்டிருக்கிறது?
13. தர்ஷீசின் கப்பல்களை நீர் எப்படி உடைக்கிறீர்?
14. எதை வந்து பார்க்க வேண்டும்?
15. கர்த்தரின் விரல்களின் கிரியை எது?

**குறிப்பு - விடைகளை வருகின்ற 20-09-2025 க்குள் சபையின் செயலாளரிடமோ (66159784) அல்லது செய்திமலர் பொறுப்பாளரிடமோ (+917305651625) கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை சங்கீதம் அதிகாரம் 1 முதல் 50 வரையுள்ள வசனங்களில் தேடி கண்டுபிடிக்கவும்.**

இந்த மாதம் வேத வினா போட்டியில் கலந்துகொள்ளும் உங்கள் அனைவரும் மீதும் கீழ் காணும் வசனத்தின் ஆசிர்வாதம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வருவதாக. எண்ணாகமம் 6 : 24_26 " கர்த்தர் உன்னை ஆசிர்வதித்து, உன்னைக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன் மேல் பிரசன்னமாக்கி, உனக்கு சமாதானம் கட்டளையிடக்கடவர் என்பதே.

## ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு விடை- 1&2 கொரிந்தியர்

1. பக்திவிருத்தி (1. கொ : 14 – 3)
2. மனுஷன் (1.கொ : 15 – 21)
3. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அன்புகூறாதவன் (1.கொ :16– 22)
4. மரணம் (1.கொ : 15–26)
5. பவுல் தீமோத்தேயுவை குறித்து (1.கொ : 16–10)
6. சுவிஷேசத்தை பிரசங்கிப்பது (1.கொ : 9–16)
7. எல்லாவற்றிலும் இச்சையடக்கமாய் இருப்பார்கள் (1.கொ : 9–25)
8. சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்து (1.கொ : 1–23)
9. தேவனுடைய ஆவிக்குரியவைகளை (1.கொ : 2–14)
10. ஞானிகள் (1.கொ : 3–20)
11. பேச்சிலே அல்ல பெலத்திலே (1.கொ : 4–20)
12. சாத்தான் (2.கொ : 2–11)
13. எழுத்து , ஆவி (2.கொ : 3–6)
14. கெட்டுப்போகிறவர்களுக்கு (2.கொ : 4–3)
15. மாம்சத்துகேற்றவை , அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு (2.கொ : 10–4)

## ஆகஸ்ட் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி . சுகந்தி
சகோ . புஸ்பராஜ்
சகோதரி . பியூலா மெர்ஸி பால்
சகோதரி . ஜாஸ்மின் பென் சாம்
சகோதரி . ஜான்சி ராணி
சகோதரி . வனிதா
சகோதரி . பிரிஸ்கில்லா செங்குட்டுவன்
சகோதரி . நித்யா ஜோன்ஸ்
சகோதரி . நகோமி ஜான்சன்
சகோதரி . போத்தியம்மாள் கண்ணன்
சகோதரி . சாந்தி ஸ்ரீனிவாசன்
சகோதரி . மரகதம் ஸ்டிபன்
சகோதரி . விக்டோரியா ராஜன்
சகோ . பக்தராஜ்
சகோ . எட்வின் சாம் ஞானதுரை
சகோதரி . மரிய குளோரி தாஸ்
சகோதரி . சுபா ஸ்டீபன்
சகோதரி . ஜீனா சதீஸ்
சகோதரி . பத்மினி வர்கீஸ்
சகோ . பால்ராஜ் சேகரன்
சகோ . தாமஸ்
சகோ . எபினேசர்

கடந்த மாதம் வேத வினா போட்டியில் கலந்து கொண்ட உங்கள் அனைவரின் மீதும் கீழ் காணும் வசனத்தின் ஆசிர்வாதம் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வருவதாக. சங்கீதம் 91 : 14

**"அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன் ; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்"**




# September Month Quiz for Children



(Write the answers using the King James Version)

Note:-All children should read the bible carefully and find the answers in the book of **Genesis chapter : 26-38**. Submit your answers to the children bible school coordinator on or before 20/9/2025. Please mention the reference along with the answers.

1. What was Issac's physical condition when he wanted to bless Esau?
2. How did Jacob deceive Isaac?
3. What did Jacob see in his dream at Bethel?
4. Who was Joseph's mother?
5. How long did Jacob serve Laban?
6. What new name did Jacob receive and why?
7. How did Esau react when he meet Jacob?
8. What happened when Raechel gave birth to Benjamin?
9. Who were the desendants of Esau?
10. Why did the LORD slay Er. Judah's first born?

## Answers for the children's quiz – August month

1. A tower whose top may reach unto heaven (Genesis 11 : 4)
2. So they could not understand each other and scatter over the earth (Genesis 11 : 7-8)
3. Their herdsman quarreled and the land couldn't support both (Genesis 13 : 6-9)
4. His nephew Lot (Genesis 14 : 16)
5. The stars in the sky (Genesis 15 : 5)
6. Circumcision (Genesis 17 : 10-11)
7. She would have a son (Genesis 18 : 10)
8. Lot and his two daughter (Genesis 19 : 29-30)
9. She became a pillar of salt (Genesis 19 :26)
10. She was his sister (Genesis 20:2)
11. Offer him as a sacrifice (Genesis 22:2)
12. No. God provided a ram indeed (Genesis 22 : 12-13)
13. In the cave of Machpelah (Genesis 23 :19)
14. Rebekah (Genesis 24 :67)
15. Esau and Jacob (Genesis 25 : 24-26)

# ABOUT OUR HOLY BIBLE

Bible is not a story book to read it just like that and go, it has truthful words. The history of our holy bible is very difficult to trace. So many God's servant gave their life to print and to release the Holy Bible to the world. The Bible was written by about forty different men and as it comes to us. It took about sixteen hundred years to compose it. The word Bible comes from a Greek word @Biblia@. Meaning@The Books@ . Bible is old book but it is very use full to our life. There is one teen girl her name is Mary Jones. She was born 1784 in December in a poor family. She loves Bible very much but in those days Bible was very costly she cannot buy. So she started to save money when she was 10 year old. After 6 years she saved how much she wanted but she did not get any Bible store near. She can get Bible from Thomas Charles Church it is 40 to 42 Km far from her house. She decided to walk 40 to 42 Km. She reached there and went to that church and asked for Bible but one sad news Thomas Charles said all the Bible sold out she wept and cried. Then Thomas Charles said I have only one Bible you can take. After she got the Bible in her hands she jumped up and down with joy. Because of her, the whole world got Bible in their own mother tongue. So we should read and meditate the Bible each and every day. It Teaches us every good things. So start to read and meditate the Bible and shine for GOD.

**GOD BLESS YOU ALL**

**By : P.S Ritiksha**

**CHILDREN'S WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF AUGUST**

- Vincy Raani
- Ritiksha
- Hanish
- Joel
- Joshua
- Kavya
- Rheul
- Solomon
- Ryan
- Andrea
- Adriel
- Aadith Singh
- Hanshika Sam
- Abel raj
- Sifenshika
- Paul Samuel
- Ashlyn keziah
- Jerald Jestine
- Hannah Menorrah
- Dhiya Yozhini

In the name of our **LORD JESUS CHRIST** We bless all the children's who participated in the QUIZ will receive the blessing according to **Romans 15 : 13 - " May the GOD of hope fill you with all joy and peace as you believe , so that you may overflow with hope by the power of THE HOLY SPIRIT"**

**Note : Children Bible School will be commencing from coming 6th September 2025 , and we welcome all our children to come , participate and receive the blessings in the name of our savior JESUS CHRIST.**

# Kids Corner


I will make a covenant
with you, by withI Will gutrantee to make you
a mighty nation
Dhiya


I Also told them about
the graciousr hand
of my god up on
me and when the
king han reed to
me they replieted
letr releuild ho and
began to good work
Nehemiah 2:18
AAddith

# கடந்த மாத நிகழ்வுகள் சில















# ஊழியம் செய்ய ஜெபியுங்கள்

# செயற்குழு உறுப்பினர்கள்

## முதன்மை ஊழியர்

Bro. ஆரோக்கியதாஸ்

Ph. 9987 0126

## செயலாளர்

Bro. ஆரோக்கியராஜ்

Ph.60918793

## பொருளாளர்

Bro. ஜாண்சன்

Ph.97610275

JESUS

## பெண்கள் ஐக்கிய தலைவி

Sis. டெய்சி எபிநேசர்

Ph.60686612

## வாலிப ஐக்கிய தலைவர்

Bro. கிறிஸ்டோபர்

Ph.67096449

Church e-mail ID- ahmaditamil.kw@hotmail.com

Church Website Address - ahmaditamilchurch.com

**Church Postal Address**
Your Name
PO.Box No: 46795,
Fahaheel, 64018,
Kuwait.

தங்களது
ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்கிறோம்

Private Circulation Only